# பன்முகப் பார்வையில் கம்பராமாயணம்

**முனைவர் து.வெள்ளைச்சாமி & சி.கலைச்செல்வி**

**அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி)**

**சிவகாசி.**

## முன்னுரை

தமிழ்க்காப்பிய வகைமையுள் கம்பரின் இராமாயணத்திற்கென்று தனிச்சிறப்பிடம் உண்டு. 'கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' இது உயர்வு நவிற்சிக்காகச் சொல்லப்பட்டது என்று பலர் கூறினாலும், அந்த அளவிற்கு கவி ஆற்றல் மிக்கவனாக கம்பன் விளங்கினான் என்பதே உண்மை.

**"கல்விசிறந்ததமிழ்நாடு - உயர்**

**கம்பன்பிறந்ததமிழ்நாடு" (பாரதியார்.)**

கம்பனின் கவித்திறனும், கவிநயமும், சொல்நயமும், ஆளுமைத்திறனும், அறிவாற்றலும், ஒரு சேர வெளிப்படும். அவனது சொல்லாட்சி நம்மை வியக்கவைக்கும். மோனை நயம்மயக்க முறச்செய்யும், எதுகையழகு இதயத்தை வருடும். இருப்பினும் கம்பன் இயற்றிய கன்னித் தமிழ்க் காவியமான இராமாயணத்தில் சுமார் 10,500 பாடல்களில் பொதிந்துள்ள அற்புதமான அழகு தமிழ்க்க விநயங்கள், சொற்கள் தவழும் நிலைகள் ஆகியவை இன்புறத்தக் கனவாகும். இத்தகைய புகழ் வாய்ந்த காப்பியத்தைப் பன்முகப் பார்வையில் பல சான்றுகளுடன் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கம்பனின்சொல்ஆளுமை – வாழிய, ஏழை**

தசரதன் இராமன் முடிசூட்டும் விழா வினைத்தெரிவிக்க கைகேயி இருக்கும் இடத்தை நோக்கி வரும்பொழுது சிற்றரசர்கள் வாழ்க! வாழ்க! என வாழ்த்திக் கொண்டு வரும் நிலையில் கம்பர்,

**"யாழிசைஅஞ்சியஅம்சொல்ஏழைகோயில்**

**வாழியஎன்றுஅயில்மன்னர்துன்னவந்தான்**

**ஆழிநெடுங்கைமடங்கல்ஆளிஅன்னான்"**

**(அயோ.கைகேயிசூழ்வினைப்படலம்.பா.5)**

என்று தன் சொல்லின் திறத்தால் பெருமையடைகின்றார். அதாவது, மடங்கள் ஆளி என்று தசரதனை ஆண் சிங்கத்திற்கு நிகரானவன் என்றும், அத்தகைய வீரன் இன்னும் சற்று நேரத்தில் மயங்கி விழப்போகிறான் என்பதை மறைத்து வாழிய வாழிய எனச்சிற்றரசர்கள்; வாழ்த்த வந்தானாம் என்பது கம்பரின் சொல்திறம் அன்றோ! வாழிய என்பது தசரதன் சற்று அண்மையிலே இறக்கப் போகிறான் என்பதைப் பின்பு புலமாகவல்லவா கொண்டுஅமைந்திருக்கின்றது. அதேபொன்று கைகேயின் பேச்சுக்கும், சொல்லுக்கும் இருக்கும் இனிமைதன் இசைக்கு இல்லையே என யாழ் அஞ்சிநிற்கும் அளவுக்கு இன்மொழி பேசும்கை கேயி, என்பது இன்னும் சிறிது நேரத்தில் வன் மொழிப் பேசப் போகிறாள் என்பதன் எதிர்மறை," யாழிசை அஞ்சிய அம்சொல் ஏழை" என கம்பர் கூறியுள்ளார்.

"ஏழை" என்ற சொல்லுக்குவறியவர் என்ற பொருளோடு பெண் என்ற பொருளும் உண்டு. இந்த ஏழையான கைகேயி தசரதனாலும் மகன் பரதனாலும் துறக்கப்பட்டு நிற்கப் போகிறாள் என்பதன் குறியீடாகவே கம்பன் இத்தகைய சொல்லினை பாடலில் கையாண்டுள்ளார்.

**கம்பனின்அரசியல்மேலாண்மை**

மக்களுக்கு நல்வாழ்வு வழங்கி, அவர்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு உதவுவது தான் ஒரு நாட்டு அரசின் முதற் கடமையாகும். அரசன் எப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்று இலக்கணம் வகுத்த வள்ளுவர்,

**“கொடையளிசெங்கோல்குடியோம்பல்நான்கும்**

**உடையனாம்வேந்தர்க்குஒளி” (குறள்.390)**

என்று குறிப்பிடுகின்றார். கொடைப்பண்பும், கருணையும், நீதிமுறையும், தளர்ந்த குடிகளைக் காத்தலும் ஆகிய நான்கு செயல்களையும் முறையாகக் கடைப்பிடிப்பவன் ஏனைய அரசர்க்கெல்லாம் விளக்காவான். கம்பனது காலத்தில் இங்கு முடியரசே இருந்தது. முடியரசு முழுவதுமாக மக்கள் நல்வாழ்விலேயே கவனம் செலுத்தும் என்று கூற முடியாது. ஆனால் கம்பர் மக்கள் நலநன மட்டுமே முதன்மையாகக் கொண்டு அரசாட்சி செய்த ஒரு முடிமன்னனைத்த மது காப்பியத்துள் அமைத்துக்காட்டுகிறார். இதனை,

**“அம்மாண்நகருக்குஅரசன்அரசர்க்குஅரசன்**

**செம்மாண்தனிக்கோல்உலகுஏழினும்**

**இம்மாண்கதைக்குஓர்இறைஆய்இராமன்என்னும்**

**மொய்ம்மாண்கழலோன் - தருநல்லறமூர்த்திஅண்ணான்”**

**(பா.கா.அரசியற்படலம்:பா.1)**

என்று குறிப்பிடுகின்றார். தான் கூறப்போகும் காப்பியத்தலைவன் இராமன் அறத்தின் மூர்த்தியாவான் அவனை இந்த உலகிற்குத் தந்ததந்தை என்று தசரதனை முதன் முதலாக அறிமுகப்படுத்துகிறார். ஏழு உலகங்களிலும் தனிச் செங்கோல் செலுத்தி ஆளும் பண்புடைய வேந்தனாக தசரதன் விளங்கினான் என்றும், நல்ல அறத்தின் மூர்த்தியாக நின்று நாட்டை ஆண்டான் என்பதும் கம்பன்காட்டும் மன்னனின் தனிச் சிறப்பாகும்.

## அரசனாவதற்கானதகுதி

இராமனுக்கு ஆட்சி என்று கேள்விப்பட்டதும் மக்கள் “ தத்தமக்கு உற்ற அரசு எனத் தழைக்கின்ற மனத்தார்” ஆயினர் என்ற கவிச்சக்கரவர்த்தியின் பொதுவுடைமைக் கூற்று, “எல்லோரும் இந்நாட்டு

மன்னர்" என்று மனம் திறந்து பாடும் அளவிற்கு பாரதியை வளர்த்துள்ளது எனலாம். இப்பொதுவுடைமை அரசியல் அமைப்பைவற் புறுத்துவதற்கு கம்பர் மேலும் ஒரு சந்தர்பத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்.தசரதன், இராமனுக்கு முடிசூட்டும் இச்செயலைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்று அம்மண்டபத்தில் கூடியிருந்த சிற்றரசர்களைப் பார்த்துக்கேட்கிறான்.

அதற்கு சிற்றரசர்கள் உவமைகள் மூலமாக, மக்களின் மகிழ்ச்சியை விவரிக்கிறார்கள். இராமகுக்கு வரும் அரசச் செல்வத்தை மக்கள் அனைவரும் தத்தமக்கு வந்ததாக எண்ணி மகிழ்வார்கள் என்று கூறியதை,

**"ஊருணிநிறையவும், உதவும்மாடுயர்**

**பார்கெழுபயின்மரம்பழுத்தற்காகவும்**

**கார்மழைபொழியவும்கழனிபாய்நதி**

**வார்புனல்பெருகவும்மறுக்கிறார்கள்யார்?"**

**(அயோ.மந்திரப்படலம்.பா.81)**

என்று கம்பர் விவரிக்கிறார். ஊர்மக்கள்நீ பருகுவதற் குரியகுளம் நீர்நிறைதல், ஊர்மக்களுக்குப் பயன்படும் பழ மரம்பழுத்தல், மேகம்மழைபொழிதல், வயல்களில் பயிர்கள் செழிப்பதற்கு நதி நீர்பெருகுதல் ஆகிய இவைகளை வேண்டாம் என்று மறுப்பவர்கள் எவரும் இல்லை என்பது போல், இராமனுக்கு வரும் அரசச் செல்வத்தை மறுப்பவர்கள் யாரும் இல்லை என்ற கருத்துபொருந்தும்படி குறிப்பிடுவதால், அறநெறிப்படி எவரும் குறை சொல்ல முடியாது. வண்ணமும், தம்முடைய செல்வத்தை மக்களிடம் பகுத்துவழங்கி, காவல் செய்யும் ஒருவனே அரசனாவதற்குத் தகுதியுடையவன் என்ற கருத்தினைக் கம்பர் உணர்த்துகிறார்.

**கம்பராமாயணத்தில்பக்திச்சிறப்பு**

இலக்கியங்கள் மனித வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த மக்கள் சமுதாயத் திற்காகப் படைக்கப்படுகின்றன. மனிதன் குழுவாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய பின்பு தன்னை மீறிய சக்தியை

வழிபடத் தொடங்கினான். ஆரம்பத்தில் வழிபாடு இயற்கையை வழிபடுவதாக இருந்தது. பின்பு அவற்றில் பல பிரிவுகள் வந்தன. தொல்காப்பிய காலத்திலேயே மாயோன், சேயோன், வருணன், வேந்தன் என வெவ்வேறு கடவுள்களை நிலத்திற்குத் தகுத்தாற் போல் வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. சங்க இலக்கியத்தில் கொற்றவை, சிவன், திருமால் தொடர்பான செய்திகள் கிடைக்கின்றன. பின்பு இலக்கியங்களில் சமயச்சார்பு இருந்தது. கி.பி.6 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் பக்தி இலக்கியம் என்ற இலக்கிய வடிவம் தோன்றி வளர்ந்தது. அதோடு பக்தி முடியவில்லை. தற்கால இலக்கியங்கள் வரை அது வளர்ந்து கொண்டே உள்ளது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள கம்பரின்பக்திச் சிறப்பு அனைத்து மக்களாலும் பேசப்படும் அளவிற்கு சிறப்புற்றுக் காணப்படுகின்றது.

**பக்தி**

மனித வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகும். அதனை இன்பமானதாக மாற்றுவதற்கு மனிதன் இறைவனை வழிபடத் தொடங்கினான். இறைவனை மனிதன் வழிபடும் பொழுது குற்றங்களிலிருந்துவிடுபடுகின்றான. இதனால் மனிதன் தூய்மையடைகின்றான். அவ்வாறு மாறும் பொழுது பக்தி உருவாகின்றது. எனவே வழிபாட்டின் உச்சநிலை பக்தியாகும். பக்தி செலுத்துபவன் தனக்காக இறைவனிடம் எதையும் எதிர்பார்க்காது இறைவனுக்காக அனைத்தையும் அர்ப்பணிப்பான். இவ்வாறு செய்யப்படும் பக்தியின் பயன் தொண்டு எனலாம். உண்மையான பக்தர்கள் தொண்டுள்ளத் தோடு செயல்படுவர்.

**இராமனின்கைச்சிறப்பும்பாதச்சிறப்பும்**

இராமன் மனித அவதாரத்தில் உள்ளகடவுள், அதனால் இராமனது பாதத்தையும், கையையும் கம்பர், பல இடங்களில் புகழ்கின்றார். விசுவாமித்திரர்தான் செய்யும்யாகத்தைக் கெடுக்க வந்த தாடகை என்னும் அரக்கியை விசுவாமித்திரர் ஏவலால் இராமன் வில் வளைத்துக் கொள்கின்றான்.

பின்பு கல்லாய் இருந்த அகலிகை இராமனது கால் பாதத் தூசி பட்டவுடன் உயிர்ப் பெற்று எழுகின்றாள். இந்த இரு நிலைகளிலும் இராமனது கையும், பாதமும் சிறப்புடையதாகக் காட்டப்பட்டுள்ளன. அதனைக் கம்பர்,

**“மை வண்ணத் தரக்கி போரின் மழை வண்ணத்தண்ணலே உன்**

**கைவண்ண மங்குக் கண்டேன் கால் வண்ணமிங்குக் கண்டேன்”**

**(கம்.பால.காண்டம்.அகலிகைப்படலம்,பா.82)**

என்ற அடிகளில் புலப்படுத்தியுள்ளார்.

**இராமநாமத்தின்சிறப்பு**

இறைவனது தோற்றத்தைப் போன்றே அவனது பெயருக்கும் மதிப்பு அதிகம். கடவுளுக்கு ஆயிரம் பெயர்கள் இருக்கும். கடவுளின் பெயரினைக் கூறினால் துன்பங்கள் தீரும் என்பது சமயவாதிகளின் நம்பிக்கையாகும். அவ்வகையில் இராமநாமம் பெரிதும் போற்றப்படுகின்றது. அப்பெயர் எதிரியும் விரும்பும் பெயராக உள்ளது. அதாவது வாலியை தன் உடலில்தைத்த அம்பு யாருடையது என்று பார்க்கின்றான். அதில் “இராம” என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அதனை வாலி காண்பதை,

**“மும்மைகால் உலகுக்கு எல்லாம் மூலமந்திரத்தை முற்றும்**

**தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும்பதத்தைத் தானே**

**இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்**

**செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களின் தெரியக் கண்டான்”**

என்று கம்பர் குறிப்பிட்டுள்ளார். இதில் மூன்று உலகுக்கும் ஆதாரமாக விளங்கும் மந்திரத்தை தம்மை வழிபடும் அடியவர்களுக்கு நன்மையை அளிக்கும் சிறப்பு மிக்க சொல்லை ஏழுபிறவிகளுக்கும் நோய்வராமல் தடுக்கும் மருந்தாகிய இராமன் என்னும் மந்திரத்தை வாலி கண்டதாக கம்பர் குறிப்பிடுகின்றார். “இரா” என்னும் சொல்லை இத்தகைய பல் வேறு சிறப்புகளை உடையது என்பதைத் தெளிபடுத்தியுள்ளதை அவரது பாடல்களால் அறியலாம்.

ISSN:2582-9599

## கம்பராமாணயத்தில் விருந்தோம்பல் பண்பு

மனித இனத்தைப் பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதே பண்பாடாகும். மக்களின் அகத்தே எழுகின்றன அன்பு, அறிவு, வீரம், காதல்போன்ற உணர்வுகளின் வழி வெளிப்படும் விழுமியங்களையே பண்பாடு என்று சான்றோர்கள் கூறுகின்றனர். தமிழர்கள் போற்றிய பண்பாடுகளில் சிறந்ததாகவும், முதன்மை வாய்ந்ததாகவும் விருந்தோம் பல் பண்பு திகழ்கிறது. இல்லற வாழ்வில் கணவனும் மனைவியும் இணைந்து ஆற்ற வேண்டிய அறம் "விருந்தோம்பல்" அறமாகும்.

"இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தம் உற்றார் உறவினரைக் காக்கக் கடமைப்பட்டவர்கள். அவருடன் நில்லாது, தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியாலும், உறையுளாலும் உபசரித்தல் அவர்தம் கடமை என்று அறநூல்கள் அறைகின்றன என்பர்.

### விருந்துஉபசரிக்கும்முறை

தமிழர்கள் விருந்தோம்பு தலைத்த மதுகடமையாக மட்டும் எண்ணாமல் உயிர்மூச்சாகவும் கொண்டு விளங்கினர். தமது இல்லம் நாடி வரும் விருந்தினர்களை அன்புடன் இனியசொற்களால் முகமலர்ச்சியோடு வரவேற்று உபசரிக்க வேண்டும் என்பதை,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து" (குறள்.90)**

என்ற குறள் வழி அறிய முடிகிறது. விருந்தினர்கள் அனிச்சமலரை விட மென்மைத் தன்மை வாய்ந்தவர்கள் என்பது எடுத்துரைக்கப்படுகிறது. ஆகையால், விருந்தினர்களை வரவேற்கும் போதும், வழியனுப்பி வைக்கும் போதும் நாகரிகத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

### பிறஇனங்களில்விருந்தோம்பல்பண்பு

### சுக்ரீவன்இராம, இலக்குவனுக்குஅளித்தவிருந்து

சீதையைத் தேடும் பொருட்டு சவரி, கவந்தன் என்ற இருவரின் கூற்றிற் கிணங்க சுக்கிரீவனை வந்தடைந்த இராம, இலக்கு வரை சுக்கிரீவன் விருந்து அளித்துச் சிறப்புச் செய்கிறான். இதனை,

**“கனியும், கந்தமும்காயும்தூயன**

**இனியயாவையும்கொணர, யாரினும்**

**புனிதன்மஞ்சனத்தொழில்புரிந்து, பின்**

**இனிதுஇருந்து, நல்விருந்தும்ஆயினான்”**

**(கி.கா.நட்புக்கோட்படலம்,பா.34)**

என்ற பாடல் விளக்கி நிற்கிறது. இதன் வழி கம்பன் குரங்கினத்திலும் விருந்தோம் பல் பண்பை முதன்மைப்படுத்திக் கூறியுள்ளமை புலனாகிறது.

**கை நாக மலை அனுமனுக்கு விருந்திடல்**

சீதையைத் தேடி கடல் தாண்டி இலங்கை நோக்கிச் செல்லும் அனுமன், வழியில் மிகப்பெரிய உயர்ந்து எழுந்து நின்றகை நாக மலையைக் காண்கிறான். அம்மலை, மனித வடிவம் பெற்று அனுமனிடம் தான் அளிக்கும் விருந்தினை ஏற்றுப்பின் அங்கிருந்து செல்லுமாறு கூறுவதை,

**“நல் தாயினும் நல்லன் எனக்கு இவன் என்று நாடி,**

**இற்றே இறை, எய்தினை, ஏய்ந்ததுகோடி, என்னால்**

**பொன் – தார் அகல் மார்ப! தம் இல்லுழை வந்த போதே,**

**உற்றார் செயல் மற்றும் உண்டோ? என, உற்று உரைத்தான்”**

**(சு.கா.கடல்தாவுபடலம், பா.57)**

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

**அரக்கர்இனத்தில்விருந்தோம்பல்பண்பு**

இராவணனுக்கு உறுதுணையாகப் போரில் உதவிய படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இராவணன் விருந்து அளிப்பதை,

**“பொருந்து பொன் பெருங்கோயிலுள், போர்த் தொழில்**

**வருந்தினர்க்கு, தம் அன்பினின் வந்தவர்க்கு**

**அருந்துதற்கு அமைவு ஆயின ஆக்குவான்**

**விருந்து அமைக்க மிகுகின்ற வேட்கையான்”**

**(யு.கா.இராவணன்களம்காண். படலம்.பா.1)**

என்ற பாடல் பறைசாற்றுகின்றது. மனிதனிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மை உடையவர்கள் தான் அரக்கர்கள். ஆனால் அவர்களிட மும்காணப்பட்ட விருந்து உபசரிக்கக் கூடிய பண்பைக் கம்பர் எடுத்துரைத் துள்ள பாங்கு போற்று தற்குரிய தாகும்.

**முடிவுரை**

கம்பர் இயற்றிய இராமாயணம் பன்முகப் பார்வையில் ஆராயப்பட்டுள்ளது. இதில் கம்பனின் சொல் ஆளுமை, அரசியல் மேலாண்மை, பக்திச் சிறப்பு, விருந்தோம்பல் பண்பு ஆகியவற்றின் சிறப்புகளை இக்கட்டுரையின் வழி அறியமுடிந்தது.

**அடிக்குறிப்பு**

1. பாரதியார், பாரதியார் கவிதைகள், பா. 4
2. கம்பராமாயணம், பால.காண்டம், அகலிகைப்படலம், பா.24
3. மு.வரதராசனார் திருக்குறள், கு.எண்.90
4. மேலது, கு.எண்.390
5. கம்பராமாயணம், பால.காண்டம், அரசியல் படலம், பா.1